# தமிழ்நாட்டில் 2016ஆம் ஆண்டுக்கான வட கிழக்குப் பருவமழை முன்னறிவிப்பு

எதிர்வரக்கூடிய 2016ஆம் ஆண்டின் வட கிழக்குப் பருவமழைக் காலத்திற்கான (அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை) மழை பற்றிய முன்னறிவிப்பு செய்வதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக ஜீன் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பசிபிக் பெருங்கடலில் பூமத்திய ரேகையை ஒட்டியுள்ள கடற்பகுதியின் மேற்பரப்பு நீரின் வெப்பநிலை மற்றும் தென் மண்டல காற்றழுத்த குறியீடு ஆகியவற்றை உபயோகித்து ஆஸ்திரேலிய நாட்டிலிருந்து பெறப்பட்ட மழைமனிதன் என்னும் கணிணி கட்டமைப்பு (Australian Rainman International V.4.3) பயன்படுத்தப்பட்டது. இதற்கான தகவல்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து பெறப்படுபட்டன. தகவல்கள் கிடைக்க இயலாத இடங்களுக்கு, மழைமனிதன் கணிணி கட்டமைப்பில் உள்ள தகவல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. சேகரிக்கப்பட்ட மழையைப் பற்றிய புள்ளி விவரங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 2016ஆம் ஆண்டில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் 60 சதவிகித வாய்ப்பாக எதிர்பார்க்கப்படும் மழையளவு கீழே தரப்பட்டுள்ளது.

வட கிழக்குப் பருவகாலத்தில் அனைத்து மாவட்ட்களிலும் **சராசரி மழையளவு (நீண்டக்கால சராசரி மழையளவிலிருந்து 19 சதவிகிதம் வரை அதிகம் மற்ற குறைந்த அளவிற்கு இடையில் கிடைக்கும்)** எதிர்பார்க்கபடுகிறது

**தகவல்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**பயிர் மேலாண்மை இயக்ககம்**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**கோயமுத்தூர் - 641 003.**

# தமிழ்நாட்டில் 2016 ஆம் ஆண்டுக்கான வட கிழக்குப் பருவமழை முன்னறிவிப்பு

(மாவட்டவாரியாக)

| வேளாண் காலநிலை மண்டலங்கள் | மாவட்டங்கள் | நீண்டகால சராசரி மழையளவு (மி.மீ) | எதிர்பார்க்கப்படும் மழையளவு - 60 சதவிகித வாய்ப்பு (மி.மீ) | எதிர்பார்க்கப்படும் அளவுகோல் |
|---|---|---|---|---|
| மேற்கு மண்டலம் | கோயம்புத்தூர் | 328 | 343 | சராசரி மழை |
| | திருப்பூர் | 314 | 323 | சராசரி மழை |
| | ஈரோடு | 314 | 315 | சராசரி மழை |
| வட கிழக்கு மண்டலம் | சென்னை | 788 | 731 | சராசரி மழை |
| | திருவள்ளூர் | 588 | 558 | சராசரி மழை |
| | காஞ்சிபுரம் | 640 | 626 | சராசரி மழை |
| | வேலூர் | 348 | 348 | சராசரி மழை |
| | திருண்ணாமலை | 445 | 432 | சராசரி மழை |
| | விழுப்புரம் | 498 | 455 | சராசரி மழை |
| வட மேற்கு மண்டலம் | சேலம் | 369 | 366 | சராசரி மழை |
| | நாமக்கல் | 291 | 278 | சராசரி மழை |
| | தர்மபுரி | 329 | 355 | சராசரி மழை |
| | கிருஷ்ணகிரி | 289 | 302 | சராசரி மழை |
| காவிரி பாசன மண்டலம் | திருச்சிராப்பள்ளி | 390 | 374 | சராசரி மழை |
| | தஞ்சாவூர் | 549 | 530 | சராசரி மழை |
| | அரியலூர் | 544 | 520 | சராசரி மழை |
| | பெரம்பலூர் | 440 | 432 | சராசரி மழை |
| | கரூர் | 314 | 344 | சராசரி மழை |
| | திருவாரூர் | 717 | 756 | சராசரி மழை |
| | கடலூர் | 696 | 689 | சராசரி மழை |
| | நாகபட்டினம் | 937 | 968 | சராசரி மழை |
| தெற்கு மண்டலம் | தூத்துக்குடி | 425 | 438 | சராசரி மழை |
| | திருநெல்வேலி | 465 | 436 | சராசரி மழை |
| | விருதுநகர் | 418 | 415 | சராசரி மழை |
| | புதுக்கோட்டை | 404 | 402 | சராசரி மழை |
| | இராமநாதபுரம் | 490 | 517 | சராசரி மழை |
| | சிவகங்கை | 421 | 419 | சராசரி மழை |
| | தேனி | 357 | 336 | சராசரி மழை |
| | மதுரை | 418 | 450 | சராசரி மழை |
| | திண்டுக்கல் | 435 | 437 | சராசரி மழை |
| அதிக மழை பெறும் மண்டலம் | கன்னியாகுமரி | 495 | 509 | சராசரி மழை |
| மலை மற்றும் அதிக உயரமுள்ள மண்டலம் | நீலகிரி | 476 | 474 | சராசரி மழை |